வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி பழனி

தேதி 13.10.2024 நேரம்-மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, 7 நாள் அரசு முறைப் பயணமாக இன்று அல்ஜீரியா, மவுரிடானியா மற்றும் மலாவி நாடுகளுக்கு சென்றுள்ளார்.

கதி சக்தி திட்டம் நாட்டின் உள்கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் பங்கேற்க மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தலைமையிலான பிரதிநிதிகள் குழு , ஜெனிவா சென்றுள்ளது.

நீடித்த எதிர்காலத்திற்கு புதுப்பிக்க தக்க எரிசக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

திரவுபதி முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, 7 நாள் அரசு முறைப் பயணமாக இன்று அல்ஜீரியா, மவுரிடானியா மற்றும் மலாவி நாடுகளுக்கு சென்றுள்ளார். இந்திய நேரப்படி இன்று இரவு 9 மணி அளவில்

அல்ஜீயர்ஸ் சென்றடைய உள்ளார். அந்நாட்டு அதிபர் திரு அப்தல் மஜீத் மற்றும் பிற முக்கிய தலைவர்களுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச்சு வார்த்தை மேற்கொள்கிறார். பின்னர் இந்தியா-அல்ஜீரியா கூட்டமைப்பில் உரையாற்றும் அவர் அறிவியல் தொழில் நுட்ப பல்கலைக்கழகம் ஒன்றிலும் உரையாற்ற உள்ளார். அல்ஜீரியாவின் முக்கியமான கலாச்சார மற்றும் வரலாற்று தலங்கள், தியாகிகள் நினைவிடம் போன்றவற்றையும் திருமதி முர்மு பார்வையிட உள்ளார். 2-ஆம் கட்டமாக வரும் 16-ஆம் தேதி மவுரிடானியா செல்லும் அவர் இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார். பின்னர் அங்கு வாழும் இந்திய வம்சாவளியினரிடம் கலந்துரையாடுகிறார்.தமது பயணத்தின் இறுதி கட்டமாக வரும் 17-ஆம் தேதி மலாவி செல்லும் அவர் அந்நாட்டு தலைவர்களுடன் பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்க உள்ளார். அந்நாட்டைச் சேர்ந்த வர்த்தகம் மற்றும் தொழில் துறை தலைவர்களுடனும் அவர் கலந்துரையாடுகிறார். இந்தியாவின் தலைமையின் கீழ் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் ஆப்பிரிக்காவிற்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கிடைத்த நிலையில் குடியரசு தலைவரின் இந்த பயணம் முக்கியத்துவம் பெறுகிறது என்பதும் குடியரசு தலைவரின் முதல் ஆப்பிரிக்க பயணம் இது என்பதும் குறிப்பிடத் தக்கது.

*பிரதமர்*

கதி சக்தி திட்டம் நாட்டின் உள்கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இத்திட்டம் தொடங்கப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் அனைத்து துறைகளிலும் விரைவான திறன் சார் வளர்ச்சியை ஒருங்கிணைப்பதில் கதி சக்தி திட்டம் முன்னோடியாக விளங்குவதாக கூறி உள்ளார். வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான மத்திய அரசின் முயற்சிகளுக்கு கதி சக்தி திட்டம் உத்வேகம் அளிப்பதாக தெரிவித்த பிரதமர் தாமதங்களைத் தவிர்த்து, ஏராளமானோருக்கு புதிய வாய்ப்புகளை இத்திட்டம் உருவாக்குவதாக தெரிவித்துள்ளார்.

*பியூஷ் கோயல்*

பிரதமரின் கதி சக்தி தேசிய பெருந்திட்டம் சரக்கு போக்குவரத்திற்கான செலவுகளை குறைப்பதுடன் சிறப்பான சேவைகளை வழங்க வகை செய்துள்ளதாக மத்திய வர்த்தக துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் பிரதமரின் கதி சக்தி திட்டம் சிறந்த முன் உதாரணமாக உள்ளது என்றும் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து பெறப்படும் தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம்

திறன் வாய்ந்த வெளிப்படையான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார்.

15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் 44 மத்திய அமைச்சகங்கள், மாநில திட்டக் குழு செயலாக்க கட்டுமானத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் கதி சக்தி திட்டம் 4-ஆவது ஆண்டில் இன்று அடி எடுத்து வைப்பது குறிப்பிடத் தக்கது.

*ஓம் பிர்லா*

ஐ நா சபையில் நடைபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சர்வதேச அமைப்பின் 149-ஆவது கூட்டத்தில் மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா தலைமையிலான நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு பங்கேற்க ஜெனிவா சென்றுள்ளது. இந்தக் கூட்டத் தொடர் இன்று தொடங்கி வரும் 17-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சியில் அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளின் பயன்பாடு குறித்து இக்கூட்டத்தில் திரு ஓம் பிர்லா உரையாற்ற உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிர்வாக கவுன்சில் கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார். பின்னர் அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுகிறார். இக்கூட்டத்தில் சீனா,

இந்தியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கின்றனர்.

கிஷன் ரெட்டி

பசுமை குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை குறைக்கும் வகையில் புதுப்பிக்க தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார். ஐதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் இந்திய புவியியல் ஆய்வுப் பயிற்சி நிறுவனத்தின் சூரிய சக்தியிலான மின்சாரப் பயன்பாட்டை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் கார்பன் உமிழ்வை குறைப்பதற்காக பிரதமரின் சூரிய சக்தி இலவச மின் திட்டம் மற்றும் அரசு அலுவலக கட்டிடங்களின் மேற்கூரையில் சூரிய சக்தி தகடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை சுட்டிக் காட்டினார்.

நீடித்த எதிர்காலத்திற்கு புதுப்பிக்க தக்க எரிசக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று கூறினார். நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யவும், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி துறையில் தன்னிறைவு பெறவும்

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், தூய்மை எரிசக்தி உதவிடும் என்றும் திரு கிஷன்ரெட்டி தெரிவித்தார்.

*பிரதமர்-தொழிற் பயிற்சி*

பிரதமரின் தொழிற் பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்கள் நாட்டின் முன்னணி நிறுவனங்களில் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது. எண்ணெய், இயற்கை எரிவாயு, எரிசக்தி, போக்குவரத்து, கனரக வாகனங்கள், நிதி சேவைகள் உள்ளிட்ட 24 துறைகளில் இப்பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

முதற்கட்டமாக 36 மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களின் 737 மாவட்டங்களில் அந்தந்த பகுதி இளைஞர்களுக்கு 1 ஆண்டு பயிற்சி வழங்கப்பட உள்ளது. 21 வயது முதல் 24 வயதிற்கு உட்பட்ட 91 ஆயிரம் இளைஞர்களுக்கு, மாதம் 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையுடன் தொழில் பழகுநர் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கு pm internship.mca.gov.in என்ற முகவரியில் விண்ணப்பிக்க வரும் 25-ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் ஒரு கோடி இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்க 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*பங்களாதேஷ்*

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள தந்தி பஜாரில் அமைந்துள்ள பூஜை மண்டபம் மற்றும் சத்கிரா-வில் உள்ள புகழ்பெற்ற ஜேஷோரேஸ்வரி காளிக் கோவிலில் நடந்த திருட்டு குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள்ளது. இந்த தாக்குதல்கள் வருத்தத்தக்கது என்றும், இந்துக்கள் மற்றும் அனைத்து சிறுபான்மையினர் மற்றும் அவர்களது வழிபாட்டு தலங்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் பங்களாதேஷ் அரசை, மத்திய வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*அரியானா*

ஹரியானா மாநில முதலமைச்சராக திரு நயாப் சிங் சைனி, வரும் 17-ஆம் தேதி வியாழக்கிழமை பதவி ஏற்கிறார். பஞ்ச்குலாவில் நடைபெறும் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், பாஜக மூத்த தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். இதனிடையே ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராக திரு உமர் அப்துல்லா வரும் 16-ஆம் தேதி புதன் கிழமை பதவி ஏற்க உள்ளார்.

*சர்வதேச பேரிடர்*

இன்று சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு நாள் கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, பேரிடர்களுக்கு எதிரான மீள் சக்தியை

வளர்ப்பதில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தலைவர் திரு ஆன்டோனியோ குட்டரேஸ் கேட்டுக் கொண்டுள்ளார். நீடித்த எதிர்காலத்தில் வருங்கால தலைமுறையினரின் ஆளுமை என்ற இந்த ஆண்டின் கருப்பொருளின் அடிப்படையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கல்வியின் மூலம் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிப்பதும், குழந்தைகள் தங்களையும், குடும்பம் மற்றும் சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் தயார் படுத்துவதே இந்த ஆண்டின் முக்கிய நோக்கமாகும்.

*ஐக்கிய நாடுகள் தினம்*

1945-ஆம் ஆண்டு அக்டோர் மாதம் 24-ஆம் நாள் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரப் பூர்மாக உருவானதை குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24-ஆம் தேதி ஐக்கிய நாடுகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இதை ஒட்டி வரும் 24-ஆம் தேதி அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் தேசிய கொடியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் கொடியையும் பறக்க விடுமாறு மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*வானிலை*

தெற்கு வங்க கடலில் நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என்றும் இது புயலாக வலுவடைந்து தமிழக கடல் பகுதியில் வரும் செவ்வாய்கிழமை கரையைக் கடக்க கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர், நாகப்பட்டிணம். திருச்சி, பெரம்பலூர் உள்ளிட்ட 16 மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்காலில் அடுத்த 2 நாட்களில் கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*காரைக்கால்-ஆய்வுக் கூட்டம்*

வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை மூலம் ஏற்படும் அனைத்து விதமான பேரிடர்களையும், சமாளிக்கும் வகையில் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த மறு ஆய்வுக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு காரைக்கால், திருநகர் சமுதாயக் கூடத்தில் நடைபெற உள்ளது. குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு திருமுருகன் தலைமையில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

புதுச்சேரி-பட்டாசு

தீபாவளிக்காக ஆன்-லைனில் பட்டாசு ஆர்டர் செய்து பணத்தை இழக்க வேண்டாம் என புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஆண்டு புதுச்சேரியில் இதுபோல ஆர்டர் செய்த 78 பேர், இணையவழி மோசடி நபர்களால் ஏமாற்றப் பட்டதாகவும், இவ்வாண்டு 3 நாட்களில் மட்டும் இத்தகைய 2 புகார்கள் பெறப்பட்டு, 45 ஆயிரம் ரூபாய் பண இழப்பு கண்டறியப் பட்டுள்ளதாகவும், சைபர் கிரைம் போலிசார் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட்

உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. ஷார்ஜாவில் இந்திய நேரப்படி இன்று இரவு 7.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது.கஜகஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய டேபிள் டென்னீஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஐஹிகா முகர்ஜி, சுதிர்த்தா முகர்ஜி இணை வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

கால்பந்து

இந்தியா-வியட்நாம் இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி டிராவில் முடிவடைந்தது. வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

பேட்மிண்டன்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் தன்யா ஹேமன்த் கைப்பற்றி உள்ளார். இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இவர் சீன தைபேயின் துங்சியூடோங்கை 21-க்கு 17, 21-க்கு 17 என்ற நேர் செட் கணக்கில் வென்றார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, 7 நாள் அரசு முறைப் பயணமாக இன்று அல்ஜீரியா, மவுரிடானியா மற்றும் மலாவி நாடுகளுக்கு சென்றுள்ளார்.

கதி சக்தி திட்டம் நாட்டின் உள்கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் பங்கேற்க மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தலைமையிலான பிரதிநிதிகள் குழு , ஜெனிவா சென்றுள்ளது.

நீடித்த எதிர்காலத்திற்கு புதுப்பிக்க தக்க எரிசக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------